**2026 பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 19/2024**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 19/2024 | பெயர்: நாச்சியப்பன்<br>த/பெ.நடராஜன் | PW5 | 26.02.2026 |

**சாட்சி 26.02.2026 ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டு, மீண்டும் அழைக்கப்பட்டு, 2 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. எனக்கு சொந்தமான செட் நம்பர் 90 ஐ மற்றும் எனது நண்பர் ராஜ்குமாரின் சொந்தமான செட் எண். 89 ஆகியவற்றை வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டு 1ஆம் எதிரிக்கு வாடகைக்கு விட்டிருந்தோம் என்றால் சரிதான். ஆங்கிய மருந்து தயாரிப்பிற்கு 1ஆம் எதிரி உரிமம் பெற்றுருந்தார் என்றால் வாடகைக்கு கேட்ட போது ஆங்கில மருந்து தயாரிக்க போவதாக சொன்னார்கள். 2011, 2012 ல் எனக்கும் 1ஆம் எதிரிக்கும் வாடகை சம்பந்தமாக தாவா இருந்தது என்றால் சரிதான். இது சம்பந்தமாக மதுரை மேலூார் சார்பு நீதிமன்றத்தில் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். இது தவிர மதுரை கருப்பாயுரை காவல் நிலையத்தில் 1ஆம் எதிரி மீது கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியின் மருத்துவ உரிமத்தை ரத்து செய்ய இயக்குநர், மருந்த கட்டுப்பாட்டு துறை, சென்னை மற்றும் உதவி இயக்குநர், மதுரை மண்டலத்திற்கு புகார் அனுப்பினேன் என்றால் சரிதான். அக்டோபர் 2004 முதல் 2014 அக்டோபர் வரை உரிமம் செல்லத்தக்கதாக இருந்தது என்றால் எனக்கு தெரியாது. உரிமம் நிலுவையிலிருந்த போது 1ஆம் எதிரியை மிரட்டி காலி செய்ததாக நான் எழுதிக்கொண்டேன் என்றால் சரியல்ல. பொய்யான ஆவணங்களை தயாரித்து நான் 1ஆம் எதிரியின்

உரிமத்தை ரத்து செய்ய மனுக்களை அனுப்பினேன் என்றால் சரியல்ல. மதுரை மேலூரில் தாக்கல் செய்த அசல் வழக்கு என்ன ஆனது என்றால் லோக் அதாலத்திற்கு அனுப்பி இருதரப்பினரும் பேசி சுமுகமாக முடித்து கொண்டோம், அதன் பின்னிட்டு 1ஆம் எதிரி இடத்தை காலி செய்து ஒப்படைத்தார். மருந்துகள் ஆய்வாளர் என்னை எங்கு வைத்து விசாரித்தார் என்றால் என் செட்டிற்கு வந்து விசாரித்தார், நான் அவர்களிடம் ஆவணங்களை கொடுத்தேன். மேற்படி ஆவணங்களை june 2014 ல் கொடுத்தேன் என்றால் சரிதான், june 2013 ல் காலி செய்து ஒப்படைத்தார். தற்போது June 2013 ல் காலி செய்யததாக கூறுகிறேன் என்றாலும் அசாஆ 91,92 ஆவணங்களின் படி July 2013 காலி செய்ததாக கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மாற்றி மாற்றி சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சி ஏற்கத்தக்கதல்ல எனறால் சரியல்ல. நான் மருந்தகள் ஆய்வாளருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.02.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.26 18:25:23 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
19.02.2026

**<u>2026 பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>S.C. நெம்பர் : 19/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| S.C. No: 19/2024 | பெயர்: டாக்டர் சுகுணா, க.பெ, ஜெயராஜ் | PW6 | 26.02.2026 |

**<u>சாட்சி 26.02.2026 ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டு, மீண்டும் அழைக்கப்பட்டு, 2 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் உணவு பாதுகாப்புதுறை மதுரை மாவட்ட நியமன அலுவலராக எந்த வருடம் பணி புரிந்தேன் என்றால் 2011 முதல் 2016 வரை பணி புரிந்தேன் என்றால் சரிதான். எனக்கு உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பணி புரிவார்கள் என்றால் சரிதான். மதுரை ஒத்தக்கடையில் 1 ஆம் எதிரி உணவு உற்பத்தி நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மதுரை ஒத்தக்கடையில் உ ணவு பாதுகாப்பு அலுவலகராக பணிபுரிந்து வந்தார் என்றால் திருமூர்த்தி என்பவர் பணி புரிந்தார். உணவு பாதுாப்பு நிறுவனத்தின் நேரடியாக ஆய்வு செய்ய எனக்கு உரிமை உள்ளதா என்றால் உண்டு. உணவு பாதுகாப்பு உரிமம் கேட்டு 1ம் எதிரி விண்ணபித்தார் என்றால் சரிதான். அவருக்கு கொடுத்த உரிமத்தை யார் ஆய்வு செய்தார்கள் என்றால் உணவு பாதுகாப்பு அலுவலர் திருமூர்த்தி ஆய்வு செய்தார். அவர் என்ன ஆய்வு செய்தார் என்ற அறிக்கையை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 21.06.2013 லிருந்து 20.06.2014 வரை உரிமம் செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். அந்த குறிப்பிட்ட காலத்தில் நானும், உணவு பாதுகாப்பு அலுவலரும் நேரடியாக ஆய்வு செய்து முறைகேடு கண்டுபிடித்து அதற்கு ஆவணம் தாக்கல் செய்தோம் என்றால் இல்லை. மேற்படி மருந்துகள்

ஆய்வாளர் 1ஆம் எதிரி நடத்திவந்த உணவு உற்பத்தி நிறுவனத்தின் ஆவணங்களை கடிதம் மூலம் கேட்டு வாங்கி வந்தார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.02.2026 ம் தேதியன்று சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.26 18:25:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.02.2026